தினதந்தி 20/9/2022

# கல்லூரி மாணவர்கள் 'ராகிங்' தடுப்பு உறுதி சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்

## பல்கலைக்கழக மானிய குழு உத்தரவு

சென்னை, செப்.20-

பல்கலைக்கழக மானியக் குழு (யு.ஜி.சி.), அனைத்து உயர் கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பிய ஒரு சுற்றறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

ராகிங்கில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை வழங்காத சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்கள் மீது பல்கலைக்கழக மானியக்குழு நடவடிக்கை எடுக்கும். கல்வி நிறுவனங்களில் ராகிங் பிரச்சினை எழுவதற்கான அடிப்படை காரணங்களை அடையாளம் காணுவதோடு, அதனை தடுக்கும் வகையில் தடுப்பு குழுக்களையும் ஏற்படுத்த வேண்டும்.

மேலும் ராக்கிங் தடுப்பு விழிப்புணர்வு சுவரொட்டிகளை கொண்டு மாணவர்களுக்கு தகுந்த விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும். இது தொடர்பான முழு வழிகாட்டுதல்கள் *www.ugc.ac.in, www.antiragging.in* என்ற இணையதளங்களில் வெளியிடப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்கள் இதனை பின்பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதிலும் குறிப்பாக *www.antiragging.in* என்ற இணையதளத்தில் கல்லூரி மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோரிடம் ராகிங் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கிறோம் என பதிவு செய்வதோடு, மாணவர்கள் ராகிங் தடுப்பு உறுதிச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

அவ்வாறு சமர்ப்பிக்கும் மாணவர்களுக்கு பதிவு எண் மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும். அதை அந்த மாணவர் கல்வி நிறுவனங்களில் அமைக்கப்பட்டு இருக்கும் ராகிங் தடுப்பு குழு கண்காணிப்பு அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மாணவர்கள் அந்த அதிகாரிக்கு அனுப்பி வைக்கும் வகையில் கல்வி நிறுவனங்கள் அது தொடர்பான மின்னஞ்சல் முகவரியையும், தொடர்பு எண்ணையும் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். மேலும் மாணவர் சேர்க்கை விண்ணப்பத்திலும் இந்த பதிவு எண் இடம் பெறும் வகையில் ஒரு வரிசையை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.